# நமது தின கனி

காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol : 01 | Issue : 37 | 4 Pages | 07.09.2023 | Thusday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 37 | 4 பக்கங்கள் | 07.09.2023 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## பிரிட்டன் முழுவதிற்கும் பலனளிக்க வேண்டும்: வர்த்தக ஒப்பந்தம் குறித்து ரிஷி சுனக்



பிரிட்டன், செப். 7

அமெரிக்கா, சீனா, ரஷியா, இங்கிலாந்து மற்றும் இந்தியா உட்பட 19 நாடுகளையும், ஐரோப்பிய ஒன்றியத்தையும் உள்ளடக்கிய கூட்டமைப்பான ஜி20 அமைப்பின் 18வது உச்சி மாநாடு இந்திய தலைநகர் புது டெல்லியில் வரும் 9, 10 தேதிகளில் நடைபெறவிருக்கிறது. இதில் பங்கேற்பதற்காக இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் (43) இந்தியாவிற்கு வருகை தர உள்ளார். இதற்கிடையே, இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்குமிடையே ஒரு தாராள வர்த்தக ஒப்பந்தம் (Free Trade Agreement) ஏற்படுத்தும் முயற்சியில் இரு நாடுகளின் தொழில் மற்றும் வர்த்தகத்துறை பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். இது தொடர்பாக தற்போது வரை அதிகாரிகள் தரப்பில் 12 சுற்று பேச்சுவார்த்தை நடந்து முடிந்திருக்கிறது. இந்த பேச்சுவார்த்தைகள் குறித்து இங்கிலாந்து பிரதமரின் கருத்தாக அந்நாட்டிலிருந்து சில தகவல்கள் வெளியாகி உள்ளன. அதில் தெரிவிக்கப்படுவதாவது: பொருளாதார வகையில் மட்டுமின்றி அனைத்து ஜனநாயக நாடுகளும் சந்தித்து வரும் சவால்களை எதிர்கொள்வதிலும் மற்றும் அனைத்து வகையிலான இரு தரப்பு உறவிலும், இங்கிலாந்திற்கு இந்தியா ஒரு தவிர்க்க இயலாத முக்கியமான வர்த்தக பங்காளி. தற்போது நடைபெறும் இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தக உறவுக்கான பேச்சுவார்த்தை தொடர்ந்து முன்னேறி வருகிறது. பிரிட்டன் முழுவதிற்கும் பலனளிக்க கூடிய ஒரு ஒப்பந்த முயற்சிக்குத்தான் பிரதமர் ஒப்புதல் அளிக்க விரும்புகிறார். வர்த்தகம், பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இந்தியாவுடன் நீடித்து நிற்கும் ஒரு உறவுமுறையை ஏற்படுத்த தாம் விரும்புவதாக கேபினெட் சந்திப்பில் பிரதமர் தெரிவித்தார். இவ்வாறு அந்த தகவல்கள் கூறுகின்றன. இந்திய வம்சாவளியை சேர்ந்த இங்கிலாந்து பிரதமரான ரிஷி சுனக்கிற்கு இந்திய வருகையின் போது, சிறப்பான வரவேற்பளிக்க இந்திய அரசு தயாராகி வருகிறது. இந்திய மென்பொருள் துறையின் முன்னணியில் உள்ள இன்போசிஸ் நிறுவனத்தின் நிறுவனரான இந்தியாவின் முன்னணி கோடீசுவரர் நாராயண மூர்த்தியின் மகள் அக்ஷரா மூர்த்தி, ரிஷி சுனக்கின் மனைவி என்பது குறிப்பிடத்தக்கது.

## கிரீன் கார்டு வாங்குவதற்குள் ஆயுளே முடிந்து விடும்: வேதனையில் இந்தியர்கள்

அமெரிக்கா, செப். 7

உயர்கல்விக்காகவும், பணியின் காரணமாகவும் அமெரிக்கா சென்று அங்கேயே தங்கும் இந்தியர்களில் பலர் அந்நாட்டிலேயே நிரந்தரமாக குடியேற விண்ணப்பங்களை தாக்கல் செய்வது வழக்கம். அயல்நாடுகளில் இருந்து அமெரிக்காவிற்கு வருபவர்களுக்கு பல நிலை விசாரணைகளுக்கு பிறகு அங்கேயே தங்குவதற்கான நிரந்தர வசிப்பிட அட்டை (Permanent Resident Card) வழங்கப்படும். அலுவல் ரீதியாக பி.ஆர். கார்டு என குறிப்பிடப்படும் இது, வழக்கத்தில் கிரீன் கார்ட் என குறிப்பிடப்படுகிறது. கிரீன் கார்ட் பெற்றுவிட்டால் அதனை ஒரு பெருமையாக கருதி அதன் காரணமாக நண்பர்களுக்கு விருந்தளித்து கொண்டாடும் அளவிற்கு அதனை பெறுவதற்கு கடும் போட்டி அங்கு நிலவுகிறது. பணியின் காரணமாக நிரந்தரமாக அமெரிக்காவில் தங்க கிரீன் கார்டிற்கு விண்ணப்பித்து இருப்பவர்களின் எண்ணிக்கை தற்போதைய நிலவரப்படி 18 லட்சமாகும். இது அந்நாட்டில் குடியேற விண்ணப்பித்துள்ள பல்வேறு நாடுகளை சேர்ந்தவர்களின் ஒட்டு மொத்த எண்ணிக்கை ஆகும். இந்த எண்ணிக்கையில் 63 சதவீதம் பேர் இந்தியர்கள். இந்நிலையில், புதிதாக குடியுரிமைக்காக விண்ணப்பிக்க விரும்பும் இந்தியர்களுக்கு "காத்திருப்பு காலம்" சுமார் 134 வருடங்கள் ஆகும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பணியின் காரணமாக அங்கேயே தங்க விரும்பி விண்ணப்பித்து இருப்பவர்களில் அனேகமாக 4 லட்சத்து 24 ஆயிரம் பேர் இதனை பெறுவதற்கு முன்பாகவே இறந்து விடுவார்கள் என்றும் அதில் 90 சதவீதம் பேர் இந்தியர்கள் எனவும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ்டெம் (STEM) எனப்படும் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் ஆகிய துறைகளில் உள்ள முக்கிய வேலைகளுக்கு பணியமர்த்த இந்தியர்களையும், சீனர்களையுமே அமெரிக்க நிறுவனங்கள் விரும்புகின்றன. ஆனால், அங்குள்ள குடியுரிமை சட்டப்படி, ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கு, மொத்த விண்ணப்பிங்களில் பணிசார்ந்த கிரீன் கார்டு விண்ணப்பங்கள் 7 சதவீதம் மட்டுமே அனுமதிக்கப்படும். சட்டரீதியான குடியேறுதலுக்கான முயற்சிகளில் உள்ள நீண்ட காலதாமதத்தை தவிர்க்க தற்போதைய ஜோ பைடன் அரசாங்கம் பல முயற்சிகளை எடுத்து வந்தாலும், விண்ணப்ப தொகுப்பில் சேர்க்கப்பட்டு பிறகு அது ஏற்கப்பட்டு, ஒப்புதல் அளிக்கப்பட்டு இறுதியாக கிரீன் கார்டு வாங்குவதற்கு அதிர்ஷ்டமும் தேவைப்படும் எனும் நிலை தோன்றி விட்டதாக அங்கு குடியேற துடிக்கும் இந்தியர்கள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

## சீனப் பெருஞ்சுவரை சேதப்படுத்திய 2 பேர் கைது



பீஜிங், செப். 7

சீனாவில் உலக அதிசயங்களில் ஒன்றான சீனப் பெருஞ்சுவர் அமைந்துள்ளது. இதனை காண ஆண்டுதோறும் சுற்றுலா பயணிகளும் வந்து செல்கின்றனர். 4,000 மைல்கள் தொலைவில் எழுப்பப்பட்ட இந்த சுவரானது பல நூற்றாண்டுகளாக கட்டப்பட்டு உருவான ஒன்று. கடந்த 1987ம் ஆண்டு சீனபெருஞ்சுவர் ஆனது யுனெஸ்கோவின் உலகபாரம்பரிய ஸ்தலங்களில் ஒன்றாக பெயரிடப்பட்டது. இந்நிலையில், வடக்கு ஷாங்சி மாகாணத்தில் யாங்கியான்ஹே நகர பகுதியில் உள்ள சீன பெருஞ்சுவரின் ஓரிடத்தில் இடைவெளி காணப்படுகிறது. விசாரணையில், இதனை எவரோ சிலர் சேதப்படுத்தி உள்ளனர் என தெரியவந்துள்ளது. இதையடுத்து யூயு கவுன்டி அதிகாரிகள் ஆய்வு செய்தனர். இதுபற்றிய விசாரணையில், 38 வயது ஆண் மற்றும் 55 வயது பெண் என இருவர் அதனை சேதப்படுத்தியது தெரிய வந்தது. அப்பகுதி வழியே கடந்து செல்வதற்காக, அவர்கள் இந்தச் செயலை செய்துள்ளனர். இதில், ஓட்டை போட்டுள்ளனர் என்றும் பராமரிப்பு செய்து அதனை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வரமுடியாத அளவுக்கு பாதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் அதிகாரிகள் கூறியுள்ளனர். சுவரின் குறிப்பிட்ட பகுதியின் ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்புக்கு அவர்கள் பாதிப்பு ஏற்படுத்தி உள்ளனர். அவர்கள் இருவரிடமும் போலீசார் தொடர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மீஞ்சூரில் தயாராகி வரும் அண்ணா, வி.பி.சிங், கருணாநிதி சிலைகள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று ஆய்வு

சென்னை, செப். 7

கருணாநிதிக்கு 3.5 அடி உயரத்தில் வெண்கலத்தால் ஆன சிலை வைக்கப்பட உள்ளது. அரசியல் ஆளுமையை விளக்கும் வகையில் நினைவிடத்தில் பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதிக்கு ரூ.39 கோடி செலவில் நினைவிடம் கட்டும் பணி மெரினா கடற்கரையில் உள்ள அண்ணா நினைவிட வளாகத்தில் கட்டப்பட்டு வருகிறது. கருணாநிதி ஆற்றிய பணிகளை போற்றும் வகையில் அவரது சாதனைகள், எழுத்தாற்றல், சிந்தனைகள், அரசியல் ஆளுமையை விளக்கும் வகையில் நினைவிடத்தில் பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. கலை, இலக்கியம், அரசியல் ஆகிய துறைகளில் முத்திரை பதித்ததன் அடையாளமாக உதயசூரியன் போன்று கருணாநிதி நினைவிட முகப்பில் 3 வளைவுகள் அமைக்கப்பட உள்ளது. இங்கு கருணாநிதிக்கு 3.5 அடி உயரத்தில் வெண்கலத்தால் ஆன சிலை வைக்கப்பட உள்ளது.



இதற்காக மீஞ்சூர் அருகே புதுப்பேடு கிராமத்தில் உள்ள தீனதயாளன் சிற்ப கூடத்தில் கருணாநிதியின் சிலை தயாராகி வருகிறது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மீஞ்சூர் சென்று கருணாநிதியின் சிலை வடிவமைப்பை பார்வையிட்டார். சிலையில் சில திருத்தங்கள் குறித்தும் ஆலோசனை வழங்கினார்.

இதே சிற்ப கூடத்தில் நினைவிடத்தில் வைப்பதற்காக 3.5 அடியில் அண்ணாசிலையும் தயாராகி வருகிறது. அதையும் அவர் பார்வையிட்டார். சென்னை மாநிலக் கல்லூரி முகப்பில் வைப்பதற்காக முன்னாள் பிரதமர் வி.பி.சிங் சிலை 9 அடி உயரத்தில் தயாராகி வருகிறது. இதையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## பல்லடம் செட்டிப்பாளையம் மதுக்கடை தற்காலிகமாக மூடல்

திருப்பூர், செப். 7

பொதுமக்கள் சார்பில் டாஸ்மாக் கடையை அகற்ற வலியுறுத்தி போராட்டங்கள் அறிவிக்கப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பட்டாசு வெடித்து, இனிப்பு வழங்கி கொண்டாடி போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

திருப்பூர் மாவட்டம் பல்லடம் செட்டிபாளையம் சாலையில் அமைந்துள்ள 1830 என்ற எண் கொண்ட டாஸ்மாக் கடையால் பல்வேறு பிரச்சனைகள் ஏற்படுவதாகவும் விபத்துக்கள் மட்டுமின்றி கொலை, கொள்ளைக்கு காரணமாக இந்த கடை இருப்பதாக பொதுமக்கள் தரப்பில் குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக பல்வேறு முறை இந்த கடையை



அகற்றக்கோரி பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் சார்பில் ஆர்ப்பாட்டங்கள் போராட்டங்கள் நடத்தப்பட்டு வந்தது. இதனிடையே கடந்த சில தினங்களுக்கு முன்பு பல்லடம் கள்ளக்கிணறு பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் வெட்டிக்கொல்லப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து மீண்டும் பொது மக்கள் சார்பில் இந்த டாஸ்மாக் கடையை அகற்ற வலியுறுத்தி போராட்டங்கள் அறிவிக்கப்பட்டது. அதன்படி இன்று நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் டாஸ்மாக் கடை முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதைத்தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த பல்லடம் தாசில்தார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். பேச்சுவார்த்தை முடிவில் இந்த டாஸ்மாக் கடை இங்கு செயல்படாத எனவும், தற்காலிகமாக மூடப்படும் எனவும் தெரிவித்தார். தொடர்ந்து இந்த கடையை இடமாற்றம் செய்வது தொடர்பாக மாவட்ட கலெக்டர் முடிவு எடுப்பார் எனவும் தெரிவித்தார். இதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பட்டாசு வெடித்து, இனிப்பு வழங்கி கொண்டாடி போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

## ஊட்டச்சத்து விழிப்புணர்வு பேரணி

திருப்பூர் , செப். 7

திருப்பூர்சிக்கண்ணாஅரசுகலைக் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் அலகு 2 மற்றும் மாவட்ட ஊரக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் இணைந்து தேசிய ஊட்டச்சத்து வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. அலகு 2 ஒருங்கிணைப்பாளர் மோகன்குமார் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் கிருஷ்ணன், வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் சௌமியா ஆகியோர் கொடி அசைத்து பேரணியை துவக்கி வைத்தனர்.

மாணவ செயலர்கள் சுந்தரம், காமராஜ், ராஜபிரபு, செர்லின், தினேஷ் கண்ணன், மதுகார்த்திக் ஆகியோர் தலைமையில் 120க்கும் மேற்பட்ட நாட்டு நலப்பணித் திட்ட அலகு 2 மாணவ மாணவிகள் கல்லூரி வளாகத்தில் இருந்து மரக்கடை பேருந்து நிறுத்தம் வரை ஊட்டச்சத்தை எடுக்க வலியுறுத்தியும், இயற்கை உணவை உட்கொள்வதால் உடல் ஆரோக்கியமாக இருக்கும், துரிதஉணவு மரண பாதைக்கு வழி வகுக்கும் என்று கோஷமிட்டும், காய்கறிகளை மாலையாக அணிந்து வேடமிட்டும், விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியும் பேரணியில் சென்றனர். பேரணியில் மேற்பார்வையாளர் காந்திமதி, அங்கன்வாடி பணியாளர் ஹேமலதா மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## வெள்ளகோவிலில் நாய் கடித்து ஆடு பலி

வெள்ளகோவில், செப். 7



வெள்ளகோவில், உப்பு பாளையம் ரோட்டில் முத்தாட்சி (வயது 70) என்பவர் வெள்ளாடுகளை வளர்த்து வருகின்றார். இந்நிலையில் நேற்று மாலை அவர் ஆட்டு பட்டியில் வளர்த்து வரும் ஆடுகளை நாலைந்து நாய்கள் சேர்ந்து கடித்துக் கொண்டிருந்தது. இதை அறிந்த அருகில் இருந்தவர்கள் உடனே சென்று நாய்களை விரட்டியடித்தனர். இதில் நாய் கடித்ததில் ஒரு ஆடு இறந்து விட்டது. மற்ற ஒரு ஆட்டிற்கு காயம் ஏற்பட்டுள்ளது. இது குறித்து அந்த பகுதி மக்கள் கூறுகையில்; வெள்ளக்கோயில் பகுதியில் மான்கள், ஆடுகள், கோழிகளை நாய்கள் கடிப்பது வாடிக்கையாகவே உள்ளது, இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

## வெள்ளகோவிலில் 100 சதவீத தேர்ச்சி பெற்ற அரசு பள்ளிகளுக்கு பாராட்டு



வெள்ளகோவில், செப். 7

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் ஒன்றிய அரசு பள்ளி கல்வி அறக்கட்டளை சார்பில் நேற்று ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தலைவர் எம்.வி. சண்முகராஜ் தலைமையில், துணைத்தலைவர் எம்.எஸ். அருண்குமார் முன்னிலையில், வெள்ளகோவில் ஒன்றிய பகுதிகளுக்குட்பட்ட 10 ம் வகுப்பு, 12 ம் வகுப்புகளில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற வெள்ளகோவில் அறிஞர் அண்ணா மேல்நிலைப்பள்ளி, புதுப்பை அரசு மேல்நிலைப்பள்ளி, உத்தமபாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி, இலக்கமநாயக்கன் பட்டி அரசு உயர்நிலைப்பள்ளி, வெள்ளகோவில், துரை ராமசாமி நகர் அரசு உயர்நிலை பள்ளிகளுக்கு நேரில் சென்று ஆசிரியர்களை பாராட்டி பொன்னாடை போற்றி வாழ்த்துக்களை தெரிவித்து கேடயங்களை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் செயலாளர் சி. தண்டபாணி, மகாத்மாகாந்தி நற்பணி மன்ற தலைவர் ராஜ்குமார், ஆசிரியர்கள் சி.பால சுப்ரமணியம், குணசேகரன் ஆகியோர் உடன் சென்றனர்.

## சிறுமிக்கு பாலியல் தொல்லை போக்சோவில் வாலிபர் கைது

பல்லடம், செப். 7

யுவராஜ் கோழிப் பண்ணையில் ஓட்டுனராக வேலை பார்த்து வருகிறார். புகாரின் பேரில் வழக்கு பதிவுசெய்து போலீசார் விசாரணை செய்தனர்.

பல்லடம் அருகே உள்ள கிராமப் பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுமி ஒருவரை காதலிப்பதாக கூறி வாலிபர் ஒருவர் பாலியல் சீண்டல்கள் செய்துள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த அந்த சிறுமி இது குறித்து அவரது பெற்றோர்களிடம் கூறியுள்ளார். இதையடுத்து அவர்கள் பல்லடம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து போலீசார் விசாரணை செய்த போது சிறுமி க்கு பாலியல் தொல்லை கொடுத்தது பல்லடம் அருகே உள்ள புளியம்பட்டியை சேர்ந்த யுவராஜ் என்பது தெரிய வந்தது.

இவர் அந்தப் பகுதியில் உள்ள கோழிப் பண்ணையில் ஓட்டுனராக வேலை பார்த்து வருகிறார்.

இதையடுத்து அவரை போக்சோ சட்டத்தில் கைது செய்த போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

# செல்போனில் பேசியபடி தண்டவாளத்தை கடந்த வாலிபர் ரெயில் மோதி பலி

தாம்பரம், செப். 7

ஒடிசா மாநிலத்தை சேர்ந்தவர் சுரை முர்மு (வயது24). இவர் பள்ளிகரணையில் உள்ள தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனத்தின் காவலாளியாக பணிபுரிந்து வந்தார். இவர் தாம்பரம் அடுத்த பெருங்களத்தூர் ரெயில்வே நிலையம் அருகே செல்போனில் பேசியபடி தண்டவாளத்தை கடந்து செல்ல முயன்றார். அப்போது அரக்கோணத்தில் இருந்து செங்கல்பட்டு நோக்கி சென்ற எக்ஸ்பிரஸ் ரெயில் சுரை முர்மு மீது மோதியது. இதில் அவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

# மீஞ்சூர் அருகே குட்கா பதுக்கி விற்பனை செய்தவர் கைது

பொன்னேரி, செப். 7

போலீசார் சோதனை செய்ததில் மீஞ்சூர் அடுத்த அரியன்வாயல் ரெயில்வே கேட் அருகே குடோனில் குட்கா பதுக்கி வைத்திருப்பது தெரிய வந்தது. குட்கா விற்பனை செய்த தவுலத் கானை கைது செய்து மீஞ்சூர் போலீசார் விசாரித்து வருகின்றனர்.



மீஞ்சூர் அடுத்த அரியன்வாயல் பகுதியில் குடோனில் புகையிலை பொருட்கள் பதுக்கி வைத்து விற்பனை செய்யப்படுவதாக ஆவடி காவல் ஆணையத்திற்கு தகவல் கிடைத்தது. ஆவடி ஆணையர் சங்கர் உத்தரவின் படி இணை ஆணையர் விஜயகுமார் துணை ஆணையர் பாலகிருஷ்ணன் மேற்பார்வையில் காவல் உதவி ஆணையர் குமரேசன் தலைமையில் மீஞ்சூர் ஆய்வாளர் காளிராஜ் மற்றும் போலீசார் மீஞ்சூர் பகுதியில் தீவிர சோதனை செய்ததில் மீஞ்சூர் அடுத்த அரியன்வாயல் ரெயில்வே கேட் அருகே குடோனில் குட்கா பதுக்கி வைத்திருப்பது தெரிய வந்தது.

இது குறித்து விசாரித்த போது சென்னை ராயபுரம் பகுதியை சேர்ந்த தவ்லத் கான் மீஞ்சூர் குடோனில் பதுக்கி சுற்றுவட்டார பகுதியில் உள்ள கடைகளுக்கு விற்பனை செய்வது தெரிய வந்தது.

பின்னர், குடோனில் பதுக்கி இருந்த ஒரு லட்சம் மதிப்பிலான பான் மசாலா குட்கா, புகையிலை பொருட்களை பறிமுதல் செய்து விற்பனை செய்த தவுலத் கானை கைது செய்து மீஞ்சூர் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# ஜேடர்பாளையம் அருகே மீண்டும் வன்முறை: டிராக்டருக்கு தீ வைப்பு, வாழைமரம் மரவள்ளி கிழங்கு பயிர் வெட்டி சாய்ப்பு

பரமத்திவேலூர், செப். 7

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகா ஜேடர்பாளையம் அருகே உள்ள வி.கரபாளையத்தில் கடந்த மார்ச் 11ந்தேதி ஆடு மேய்க்க சென்ற பட்டதாரி இளம்பெண் ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்து கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக வெல்லம் ஆலை கொட்டைகையில் பணிபுரிந்து வந்த கரூர் மாவட்டத்தை சேர்ந்த 17 வயது சிறுவன் கைது செய்யப்பட்டான். இந்த நிலையில் இளம்பெண் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடிக்கக் கோரி அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் தொடர்ந்து பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையில் வடமாநில தொழிலாளர்கள் பணிபுரியும் ஆலை கொட்டகைகள், டிராக்டர்கள், குடிசைகள், பள்ளி பேருந்து போன்றவற்றிற்கு தீவைப்பு சம்பவங்கள், குளத்தில் விஷம் கலந்தது என அடுக்கடுக்கான வன்முறை சம்பவங்கள் 2 மாதங்களாக நடைபெற்றுவந்தது. கடந்த மே மாதம் 13ந்தேதி முத்துசாமி என்பவருக்கு சொந்தமான ஆலை கொட்டகையில் மர்மநபர்கள் புகுந்து தொழிலாளர்கள் மீது மண்எண்ணெய் பாட்டில்களை வீசி தீவைத்தனர். இதில் ஒடிசா மாநிலத்தை சேர்ந்த ராஜேஷ் என்பவர் உயிரிழந்தார். இந்த சூழலில் புதுப்பாளையம் பகுதியில் முருகேசன் என்பவருக்கு சொந்தமான வாழை தோப்பில் சுமார் 500க்கும் மேற்பட்ட வாழை மற்றும் பாக்கு மரங்கள் வெட்டி சாய்க்கப்பட்டது.

மேலும் பொத்தனூர் பகுதியை சேர்ந்த எல்.ஐ.சி முகவர் சவுந்தர்ராஜன் என்பவருக்கு சொந்தமான சின்னமருதூர் பகுதியில் 3 ஏக்கர் நிலத்தில் நடப்பட்டிருந்த சுமார் 3200 பாக்கு மரங்கள் மர்மநபர்களால் வெட்டிச் சாய்க்கப்பட்டன. இந்த நிலையில் நேற்று இரவு ஜேடர்பாளையம் வடக்கு தோட்டத்தை சேர்ந்த கருப்பண்ணன் மகன் சுப்பிரமணி (42) என்பவருக்கு சொந்தமான தோட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிராக்டரை மர்மநபர்கள் தீ வைத்து எரித்து விட்டு தப்பி சென்றுள்ளனர். இதில் டிராக்டரின் முன்பக்க 2 டயர்கள் மற்றும் பின்பக்க டயர் ஒன்றும், டிராக்டர் என்ஜினும் எரிந்துள்ளது. இதே போல் அதே பகுதியை சேர்ந்த பெரியசாமி(70) என்பவரது தோட்டத்தில் பயிர் செய்திருந்த மரவள்ளி கிழங்கு செடிகளையும், அதே பகுதியைச் சேர்ந்த வீரமணி(42) என்பவருக்கு சொந்தமான வாழை மரங்களையும் மர்மநபர்கள் வெட்டி சாய்த்துள்ளனர். சம்பவ இடத்தில் போலீஸ் சூப்பிரண்டு ராஜேஷ் கண்ணா தலைமையில் கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு ராஜு, துணை போலீஸ் சூப்பிரண்டுகள், இன்ஸ்பெக்டர்கள், சப்இன்ஸ்பெக்டர்கள் மற்றும் போலீசார் கொண்ட குழுவினர் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் சம்பவ இடத்திற்கு கைரேகை நிபுணர்களும் வரவழைக்கப்பட்டு கைரேகைகளை பதிவு செய்து ஆய்வு செய்து வருகின்றனர். ஜேடர்பாளையம் பகுதி முழுவதும் 600க்கும் மேற்பட்ட போலீசார் இரவு பகலாக பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வரும் நிலையில் மீண்டும் அசம்பாவித சம்பவம் நடைபெற்றுள்ளது அப்பகுதி பொதுமக்களிடையே மிகுந்த பரபரப்பையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

# மும்பையை சேர்ந்த பள்ளி சிறுமியை மதுரைக்கு கடத்தி வந்த வாலிபர்

மதுரை, செப் 7

மகாராஷ்டிரா மாநிலம் மும்பை தானே மாவட்டம் வெர்சோவா பகுதியைச் சேர்ந்தவர் பாக்கியராஜ். இவர் தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் மும்பையில் வசித்து வருகிறார். அங்கு இட்லி கடை வைத்து தொழில் செய்து வரும் இவரது கடையில் உறவினரான மதுரை மாவட்டம் திருமங்கலத்தை அடுத்துள்ள வாழவந்தான் புரம் பகுதியைச் சேர்ந்த முத்துக்கருப்பன் மகன் மாணிக்கம் (வயது 30) என்பவர் உதவியாளராக வேலை பார்த்து வந்தார். இதற்கிடையே கடந்த 6ந்தேதி பாக்கியராஜின் மகள் வீரலட்சுமி (16) பள்ளிக்குச் சென்றிருந்தார். அவரை யாருக்கும் தெரியாமல் மாணிக்கம் மதுரைக்கு அழைத்து வந்து விட்டார். பல்வேறு இடங்களில் பாக்கியராஜ் தனது மகளைத் தேடியும் கிடைக்காததால் அதிர்ச்சி அடைந்தார். ஆனால் அதே நேரத்தில் மாணிக்கமும் மாயமாகி இருந்தததால் சந்தேகத்தின் பேரில் தானே வெர்சோவா காவல் நிலையத்தில் பாக்கியராஜ் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப் பதிவு செய்து மதுரை மாவட்டம் திருமங்கலத்தை அடுத்துள்ள வாழவந்தான் கிராமத்தில் பதுங்கியிருந்த மாணிக்கம் மற்றும் வீரலட்சுமி ஆகியோரை கண்டுபிடித்தனர். மாணிக்கத்தை கைது செய்து மதுரையிலிருந்து விமானம் மூலம் மும்பை கொண்டு செல்ல ஏற்பாடு செய்தனர். இந்நிலையில் முறையான ஆவணங்கள் இல்லாததால் மதுரை விமான நிலையத்தில் அதிகாரிகள் பயணம் செய்ய அனுமதி மறுத்தனர். இதனை தொடர்ந்து அதிகாரியிடம் நடத்திய பேச்சுவார்த்தையில் மாணிக்கம் கைது செய்யப்பட்டதற்கான சான்று மற்றும் பாக்கியராஜ் அளித்த புகார் மனு ஆகியவை கொண்டு அனுமதி வழங்க போலீசார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். சிறுமியை கடத்தி தப்பி வந்த மாணிக்கத்தால் மதுரை விமான நிலையம் பரபரப்பாக காணப்பட்டது. போலீசார் அனுமதி சான்று அளித்தவுடன் மும்பை போலீசார் பாக்யராஜ், வீரலட்சுமி மற்றும் சிறுமியை கடத்திய குற்றவாளி மாணிக்கம் ஆகியோர் மும்பைக்கு விமான மூலம் பயணம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

# பிளஸ்1 மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்: தமிழ் இலக்கிய திறனறித் தேர்வு 20ந் தேதி கடைசி நாள்

வேலூர், செப். 7

தமிழகத்தில் பள்ளி மாணவர்களின் அறிவியல், கணிதம் சார்ந்த ஒலிம்பியாட் தேர்வுகளுக்கு பெருமளவில் தயாராகி பங்குபெறுகின்றனர். அதேபோல் தமிழ்மொழி இலக்கிய திறனை மாணவர்கள் மேம்படுத்திக்கொள்ளும் வகையில் தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்வு நடத்தப்படுகிறது. இந்த தேர்வில் கலந்து கொள்ள 1500 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு பள்ளிக்கல்வித்துறை வழியாக மாதம் ரூ.1,500 வீதம் 2 வருடங்களுக்கு வழங்கப்படும். இத்தேர்வில் 50 விழுக்காடு அரசுப்பள்ளி மாணவர்களும், மீதமுள்ள 50 விழுக்காட்டிற்கு பிற தனியார் பள்ளி மாணவர்களும் தேர்வு செய்யப்படுவார்கள். தமிழ்நாடு அரசின் 10ம் வகுப்பு நிலையிலான பாடத்திட்ட அடிப்படையில் தேர்வு நடத்தப்படும். அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட தலைநகரங்களில் இந்த தேர்வு நடக்கும். அதன்படி இந்த ஆண்டு தமிழ்மொழி இலக்கிய திறனறி தேர்வு வருகிற அக்டோபர் மாதம் 15ந் தேதி நடக்கிறது. இந்த தேர்வில் கலந்து கொள்ள விருப்பம் உள்ள அரசுபள்ளி, சி.பி.எஸ்.இ., ஐ.சி.எஸ்.சி. உள்பட பிளஸ்1 வகுப்பு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். மேலும் மாணவர்கள் விண்ணப்பங்களை இணையத்தில் பதிவிறக்கம் செய்து, வருகிற 20ந் தேதிக்குள் பள்ளி தலைமை ஆசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# கொலை செய்யப்பட்ட 4பேரின் குடும்பத்தினருக்கு நிவாரண நிதி

பல்லடம், செப். 7

பல்லடம் அருகே உள்ள கள்ளக்கிணறு குறை தோட்டம் பகுதியை சேர்ந்த மோகன்ராஜ், செந்தில்குமார், புஷ்பவதி, ரத்தினம்மாள் ஆகிய 4 பேர் வெட்டி கொலை செய்யப்பட்டனர். அவர்களது குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.2 லட்சம் வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார். இதைத் தொடர்ந்து நேற்று இரவு திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் கொலை செய்யப்பட்ட குடும்பத்தினரை நேரில் சந்தித்து, அவர்களுக்கு ஆறுதல் கூறி, நான்கு குடும்பத்தினருக்கும் தலா ரூ. 2 லட்சத்திற்கான காசோலையினை வழங்கினார். இந்த நிகழ்ச்சியின் போது மாவட்ட போலீஸ் சூப்பிரண்ட் சாமிநாதன், சப்கலெக்டர் ஸ்ருதன் ஜெய் நாராயணன், பல்லடம் தாசில்தார் ஜெய்சிங் சிவக்குமார், மற்றும் அரசு அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள், உறவினர்கள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.2 லட்சம் வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார். மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் கொலை செய்யப்பட்ட குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.



# வீழ்ச்சி அடையும் பட்டுப்புழு வளர்ப்பு தொழில் விவசாயிகள் வேதனை

உடுமலை, செப். 7

விவசாயிக்கு கை கொடுத்து உதவும் தொழிலாக பட்டுப்புழு வளர்ப்பு உள்ளது வீரியம் இல்லாத புழுக்களே விவசாயிகளுக்கு கிடைப்பதாக குற்றச்சாட்டு தெரிவிக்கின்றனர்.

பல்வேறு இடர்பாடுகளால் சாகுபடி பணிகளை திறம்பட செய்ய இயலாமல் தவித்து வருகின்ற விவசாயிக்கு கை கொடுத்து உதவும் தொழிலாக பட்டுப்புழு வளர்ப்பு உள்ளது. குறைவான நாட்களில் மாதந்தோறும் வருமானம் ஈட்டலாம் என்பதால் வழிமுறை தெரிந்த விவசாயிகள் தகுந்த பயிற்சி பெற்று அதிகாரிகளின் வழிகாட்டுதல், உதவியுடன் இந்த தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் கடந்த சில மாதங்களாக இளம்புழுக்கள் உற்பத்தி மையங்களில் மத்திய மாநில அரசு அதிகாரிகள் உரிய ஆய்வு செய்யாததால் தரமற்ற முட்டை, வீரியம் இல்லாத புழுக்களே விவசாயிகளுக்கு கிடைப்பதாக குற்றச்சாட்டு தெரிவிக்கின்றனர். புழுக்களின் நிலையை விவசாயிகள் கண்டறிய முடியாது என்பதால் இளம்புழுக்கள் மையத்தில் கொடுக்கப்படும் முட்டை தொகுப்பை கொண்டு வந்து பராமரிப்பு செய்து வருகின்றனர். அவை உற்பத்தியை எட்டும் நிலையில் கூடு கட்டாமல் இறந்து வருகிறது. இதனால் இலவு காத்த கிளி போல் இறுதியில் பலன் கிடைக்கும் என்று காத்திருந்த விவசாயிக்கு சொல்லில் அடங்காத அளவிற்கு இழப்பு ஏற்பட்டு ஏமாற்றமே மிஞ்சுகிறது.

இது குறித்து உடுமலை கண்ணம்மநாயக்கனூர் பகுதி விவசாயிகள் கூறியதாவது: பல்வேறு பகுதியில் இருந்து பெறப்படும் முட்டைகளை தனியார் இளம் புழுக்கள் மையம் வளர்த்து முட்டை தொகுப்பாக விவசாயிக்கு அளிக்கிறது. அதை வாங்கி வந்து இரவு பகலாக கண்விழித்து பாதுகாத்து பராமரிக்கின்றோம். சாகுபடி பணியில் நஷ்டம் அடைந்த விவசாயிகள் மாற்றுத் தொழிலாக பட்டு வளர்ப்பு உள்ளது. மாதந்தோறும் ஓரளவுக்கு வருமானம் கிடைக்கும் என்பதால் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றோம்.

ஆனால் கடந்த சில மாதங்களாக விவசாயிகளுக்கு தரமற்ற முட்டை, வீரியமில்லாத புழுக்கள் வழங்கப்படுகிறது. புழுக்களாக வாங்கி வரும் போது விவசாயிகளுக்கு குறைபாடுகள் தெரியாது. புழுக்கள் வளர்ந்து கைக்கு வருமானத்தை அளிக்கக்கூடிய நிலையிலேயே இந்த விவரம் தெரிய வரும். அப்போது விவசாயியின் மொத்த உழைப்பு, கால நேரம் வீணாகி விடுகிறது. கடந்த ஆண்டு வரை இன்சூரன்ஸ் பணத்தை அரசே செலுத்தி வந்தது. இந்த ஆண்டில் எங்கள் தரப்பில் செலுத்தினோம். ஆனால் அதுவும் முறைப்படி கிடைக்கவில்லை. இதனால் பட்டுப்புழு வளர்ப்பில் மொத்த நஷ்டமும் விவசாயிகள் சுமக்க வேண்டி உள்ளது. அதிகாரிகளின் அலட்சியத்தால் முழுக்க முழுக்க பாதிக்கப்படுவது விவசாயிகள் தான். துறையின் பெயரில் தான் வளர்ச்சி உள்ளது தவிர விவசாயின் உழைப்பு வாழ்வாதாரம் தேய்ந்து வருகிறது. இதனால் அதிகாரிகள் அரசு மற்றும் தனியார் இளம்புழுக்கள் வளர்ப்பு மையத்தில் உரிய முறையில் ஆய்வு செய்து தரமான முட்டை, வீரியம் உள்ள புழுக்களை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு முன் வர வேண்டும். மேலும் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு உரிய நிவாரணமும் வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# ஆசிரியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்: அர்ஜீன் சம்பத் பேட்டி

திருப்பூர், செப். 7

ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். குருவையும், தாய், தந்தையரையும் போற்றும் குருகுலக் கல்வி மீண்டும் வர வேண்டும்.

திருப்பூர், ராயபுரத்தில் உள்ள இந்து மக்கள் கட்சி அலுவலகத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் எஸ். ராதாகிருஷ்ணன், சுதந்திரப் போராட்ட வீரர்கள் வ.உ.சி., விருப்பாச்சி கோபால் நாயக்கர் ஆகியோரின் உருவப் படங்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் பங்கேற்ற இந்து மக்கள் கட்சி நிறுவனர் அர்ஜுன் சம்பத் நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழக அரசால் ஆசிரியர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். குருவையும், தாய், தந்தையரையும் போற்றும் குருகுலக் கல்வி மீண்டும் வர வேண்டும். தமிழகத்தில் புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்த வேண்டும்.

சுதந்திரப் போராட்ட வீரர்கள் வ.உ.சிதம்பரனார், விருப்பாச்சி கோபால் நாயக்கர் ஆகியோரின் வரலாற்றைப் பள்ளி மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். சனாதன ஒழிப்பு மாநாட்டில் பங்கேற்ற அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், பி.கே.சேகர்பாபு ஆகியோரைப் பதவி நீக்கம் செய்யக் கோரி மத்திய அரசு, மாநில ஆளுநருக்கு இந்து மக்கள் கட்சி சார்பில் புகார் மனு அனுப்பும் போராட்டம் நாளை 7ந் தேதி அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நடைபெறும் என்றார்.

இந்த சந்திப்பின்போது இந்து மக்கள் கட்சி ஒருங்கிணைந்த மாவட்டச் செயலாளர் மணிகண்டன் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

# பல்லடத்தில் வ.உ.சி., பிறந்த நாள் விழா

பல்லடம், செப். 7

வ. உ. சிதம்பரனாரின் 152 வது பிறந்தநாள் விழா பல்லடம் பொதுமக்கள் சார்பில் கொண்டாடப்பட்டது.

பிறந்தநாளை முன்னிட்டு அப்பகுதி மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது பல்லடத்தில், வ. உ. சிதம்பரனாரின் 152 வது பிறந்தநாள் விழா பல்லடம் சமூக ஆர்வலர் கூட்டமைப்பு மற்றும் பொது மக்கள் சார்பில் கொண்டாடப்பட்டது. இதில் அவரது உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் அப்பகுதி மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பல்லடம் சமூக ஆர்வலர் கூட்டமைப்பின் தலைவர் அண்ணாதுரை, பாலுமணியகாரார், மருத்துவர் ராஜ்குமார், பாலாஜி ஈஸ்வரன் மற்றும் பலர் கலந்து கொணடனர்.



# சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விளைபொருட்களை இருப்பு வைத்து பொருளீட்டு கடன் பெறலாம்

அவிநாசி, செப். 7

இருப்பு வைத்து பொருளீட்டுக் கடன் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 3 ஆயிரம் ஏக்கரில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலக்கடலை உள்ளிட்ட விளைபொருட்களை இருப்பு வைத்து பொருளீட்டுக் கடன் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சந்திரமோகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு: அவிநாசி வட்டாரத்தில் மானாவாரி முறையில் 3 ஆயிரம் ஏக்கரில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது நிலக்கடலை அறுவடையை விவசாயிகள் தொடங்கியுள்ளனர். அறுவடை செய்யப்படும் நிலக்கடலையை காயவைப்பதற்கு ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் 1 லட்சம் சதுர அடியல் உலர்கள வசதியுள்ளது. மேலும், இநாம் திட்டத்தில் நடைபெறும் மறைமுக ஏலத்தில் பங்கேற்று தங்களது விளைபொருட்களை விற்பனை செய்து கொள்ளலாம். விவசாயிகள் எதிர்பார்த்த விலை கிடைக்காவிட்டால் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் உள்ள கிடங்குகளில் இருப்பு வைத்துகொள்ளலாம். இவ்வாறு, இருப்பு வைக்கப்படும் நிலக்கடலை உள்ளிட்ட அனைத்து விளைபொருட்களுக்கும் விவசாயிகளுக்கு 5 சதவீத வட்டி விகிதத்திலும், வியாபாரிகளுக்கு 9 சதவீத வட்டி விகிதத்திலும் பொருளீட்டுக் கடன் வழங்கப்படுகிறது. இதனை விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நடந்து சென்ற பெண்ணிடம் 7 பவுன் செயின் பறிப்பு

தஞ்சாவூர், செப். 7

தஞ்சை அருகே உள்ள பிள்ளையார்பட்டி சோழன் நகரை சேர்ந்தவர் வேலாயுதம். இவரது மனைவி நீலாவதி (55). இவர் தனது பேத்தியை அருகே உள்ள பள்ளிக்கூடத்தில் விட்டுவிட்டு தனியாக வீட்டுக்கு நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது எதிரே மோட்டார் சைக்கிளில் வந்த ஒரு மர்ம நபர் திடீரென நீலாவதியின் கழுத்தில் கிடந்த 7 பவுன் தங்கசெயினைசட்டென்று பறித்தார். அதிர்ச்சி அடைந்த நீலாவதி திருடன்.. திருடன். என கத்தி கூச்சலிட்டார். ஆனால் அதற்குள் அந்த மர்ம நபர் மோட்டார் சைக்கிளில் தப்பி சென்று விட்டார். இதுகுறித்து நீலாவதி தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். அதன் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி மர்ம நபரை தேடி வருகின்றனர். இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஆலங்காயம் சமுதாய சுகாதார நிலையத்தில் ஆய்வு கூட்டம்

ஆலங்காயம், செப்7

திருப்பத்தூர் மாவட்டம் ஆலங்காயம் வட்டார அரசு சமுதாய சுகாதார நிலையத்தில் மாதாந்திர ஆய்வுக் கூட்டம் வட்டார மருத்துவ அலுவலர் பசுபதி தலைமையில் நடந்தது.



இதில் அரசின் பல்வேறு நலதிட்ட உதவிகள் பொது மக்களுக்கு சென்றடைகிறதா? சென்றடையாதவை ஏதேனும் இருந்தாலோ, பின்னடைவுஇருந்தாலோ அதை சரி செய்ய வேண்டும் என்று ஆலோசனை வழங்கப்பட்டது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் மருத்துவ அலுவலர்கள், வட்டார சுகாதார மேற்பார்வையாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் அனைத்து சுகாதாரப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# பாலக்கோடு நகர பகுதியில் சாலையின் நடுவே பேரிகார்டு அமைக்கபடாததால் விபத்துகள் அதிகரிப்பு

பாலக்கோடு, செப். 7

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு நகருக்கு ஆயிரக்கணக்கான பொது மக்கள் நாள்தோறும் பல்வேறு வேலைகளுக்கு வந்து செல்கின்றனர். உள்ளூர் மற்றும் வெளியூர், வெளிமாவட்ட, மாநிலங்களில் இருந்தும், ஒகேனக்கல் சுற்றுலா தளத்துக்கு செல்வதற்கும், பாலக்கோடு நகரம் பிரதான மையமாக உள்ளது. தற்போது பேருந்து நிலைய புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதால், தற்காலிக பேருந்து நிலையம் தக்காளி மண்டி அருகே அமைக்கப்பட்டுள்ளது. இதனால் பெரும்பாலான வாகன ஓட்டிகள் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க புறவழிச்



சாலையை பயன்படுத்தி வருகின்றனர். மேலும் புறவழிச்சாலை பகுதியில் அரசு மகளிர் பள்ளி, அரசு மற்றும் தனியார் மருத்துவமனை, வணிக நிறுவனங்கள் உள்ளிட்டவைகளுக்கு பொதுமக்கள் சாலையை கடக்கும் சூழலில்அடிக்கடிவிபத்துக்கள் ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில் தக்காளி மார்க்கெட் பிரிவு சாலை, எம்ஜி ரோடு பிரிவு சாலை, ஓசூர் புறவழிச்சாலை பிரிவு, பாப்பாரப்பட்டி சாலை பிரிவு உள்ளிட்ட பகுதிகளில் விபத்துகளை தடுக்க போலீசாரால் கண்காணிப்பு கேமரா மற்றும் தடுப்பு சுவர் (பேரிகார்டு) உள்ளிட்டவை வைக்கப்பட்டிருந்தன. தற்போது அனைத்து பேரிகார்டுகளும் பஸ் நிலையம் கட்டுமான பாதுகாப்பு பணிக்கு பயன்படுத்தி வருவதால், அடிக்கடி வாகனங்கள் மோதி விபத்துகள் ஏற்படுத்தி வருகின்றன. இதனால் பொதுமக்கள் மட்டுமின்றி பள்ளி, கல்லூரி மாணவர்களும் அவதியடைந்து வருகின்றனர். இது குறித்து தெரிந்தும் போலீசார் மற்றும் உயர் அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் தமிழக முதல் அமைச்சர் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வட்டார கல்வி அலுவலர் பணியிடமாற்றம்

சோளிங்கர், செப்.7

ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கரில் ஊராட்சி ஒன் றிய வட்டார கல்வி அலுவல ராக பாபு என்பவர் பணி யாற்றி வந்தார்.

இவர் சாதி பாகுபாடு காட்டுதல், பெண் ஆசிரியர்களை கீழ்தரமாக பேசுவது உள்ளிட்ட மோச மான செயலில் ஈடுபட்டு வந்ததாகவும், அவர் மீது சட் டரீதியான நடவடிக்கை எடுக்ககோரி தமிழ்நாடு ஆரம் பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநிலத்த லைவர் மணிமே கலை, மாநில பொருளாளர் மத்தேயு, மாவட்ட தலைவர் சிவராஜ், மாவட்ட செயலா ளர் அமர்நாத், மாவட்ட பொருளாளர் தனலட்சுமி ஆகியோர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில் வட்டார கல்வி அலுவலர் பாபுவை திருவண்ணாமலை மாவட் டம் துரிஞ்சாபுரம் வட்டார கல்வி அலுவலராக பணியிட மாற்றம் செய்து கலெக்டர் வளர்மதி உத்தரவிட்டார்.

# கோடை காலம் முடிந்த பிறகும் பொதுமக்களுக்கு "ஷாக்" கொடுக்கும் மின்சார கட்டணம்

சென்னை, செப். 7

காற்றோட்ட வசதி இல்லாததால் நகரமக்கள் ஏ.சி. படுக்கை வாழ்க்கைக்கு மாறி விட்டனர். கடந்த ஆகஸ்டை ஒப்பிடும் போது ஒவ்வொரு குடும்பத்திலும் மின் பயன்பாடு அதிகரித்து உள்ளது.

தமிழ்நாட்டில் மின்சார கட்டணம் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் உயர்த்தப்பட்டது. 2 கோடியே 41 லட்சம்பேர்வீடுகளுக்கான மின் இணைப்பை பயன்படுத்தி வருகின்றனர். இதில் 97 லட்சம் குடும்பத்தினர் 100 யூனிட்டிற்கு குறைவாக மின்சாரத்தை பயன்படுத்துவதால் அவர்களுக்கு கட்டணம் கிடையாது. முதல் 100 யூனிட் தவிர இலவச மின்சாரம் அனைவருக்கும் வழங்கப்பட்டு வருகிறது. 101200 யூனிட் வரை ரூ.2.25, 401500 யூனிட் வரை ரூ.6, 501600 வரை ரூ.8 என கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது.

8011000 யூனிட் பயன்படுத்துவோருக்கு 10 ரூபாய் வசூலிக்கப்படுவதால் 2 மாதங்களுக்கு ஒருமுறை மின் கட்டணமாக ரூ.10 ஆயிரத்திற்கு மேல் செலுத்த வேண்டும். மின் கட்டண உயர்வு செய்யப்பட்டு ஒரு வருடம் ஆகியுள்ள நிலையில் ஒவ்வொரு குடும்பத்தினரும் ரூ.5 ஆயிரம், 10 ஆயிரம் என பெரும் தொகை கட்டுகின்ற நிலை தற்போது ஏற்பட்டு உள்ளது. ரூ.2 ஆயிரம், ரூ.4 ஆயிரம் என்ற அளவில் மின் கட்டணம் செலுத்தி வந்த சாதாரண மக்கள் தற்போது தங்களின் வருவாயில் பெரும் தொகையை மின் கட்டணத்திற்கு செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது. சென்னையில் வாடகை வீடுகளில் வசிக்கும் மக்கள் இதனால் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். மாத சம்பளம் வாங்கக்கூடியவர்கள் வருமானத்தில் மின் கட்டணத்திற்கு பல ஆயிரங்களை செலவிடும் நிலை உள்ளது. கடந்த ஆகஸ்டை ஒப்பிடும்போது 2 மடங்கு மின் கட்டணம் உயர்ந்து இருப்பதாக கூறுகிறார்கள்.

இதற்கு முக்கிய காரணம் ஏ.சி. பயன்பாடு என்று கூறப்படுகிறது. சொந்த வீடுகளில் வசிப்பவர்கள் மட்டுமின்றி வாடகை வீடுகளில் குடியிருப்பவர்களும் ஏ.சி. எந்திரத்தை அதிகளவில் பயன்படுத்த தொடங்கி விட்டனர்.

சென்னை நகரத்தில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடியால் ஒட்டி கட்டப்பட்டுள்ள வீடுகளில் மட்டுமின்றி 90 சதவீத வீடுகளில் ஏ.சி. பயன்படுத்தப்படுகிறது. காற்றோட்ட வசதி இல்லாததால் நகர மக்கள் ஏ.சி. படுக்கை வாழ்க்கைக்கு மாறி விட்டனர். அதுவும் இந்த ஆண்டு வெயிலின் தாக்கம் இன்னும் குறையவில்லை. வழக்கமாக ஜூன், ஜூலை மாதங்களில் கோடை வெயில் படிப்படியாக குறைந்து விடும். ஆனால் இந்த வருடம் செப்டம்பர் வரை வெயில் கொளுத்தி வருகிறது. மாறுபட்ட தட்பவெப்ப சூழலால் மக்கள் ஏ.சி.யை அதிகளவில் பயன்படுத்துகின்றனர். கடந்த ஆகஸ்டை ஒப்பிடும்போது ஒவ்வொரு குடும்பத்திலும் மின்பயன்பாடு அதிகரித்து உள்ளது. இதுவே மின் கட்டண உயர்வுக்கு முக்கிய காரணம் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். சாதாரண வீடுகளில் உள்ள மக்கள் முதல் பண்ணை வீடுகளில் வசிக்கும் மக்கள் வரைமின்கட்டணஉயர்வு பாதித்து உள்ளது.

பனையூரில் பண்ணை வீட்டில் வசிக்கும் ஒருவர் கடந்த ஆண்டு மே மாத மின் கட்டணம் ரூ.60 ஆயிரம் செலுத்தி உள்ளார். அதே அளவில் தான் இந்த ஆண்டு பயன்படுத்தி உள்ளார்.

ஆனால் மின் கட்டணம் ரூ.1 லட்சமாக உயர்ந்து உள்ளது. மின் கட்டண உயர்வால் மின் வாரியத்திற்கு வருவாய் அதிகரித்து உள்ளது. மே மாதம் மின் வாரியத்திற்கு மின் கட்டண வசூல் தொகை ரூ.939 கோடியாக உள்ளது. இது கடந்த ஆண்டை ஒப்பிடும்போது 28 சதவீதம் அதிகமாகும். கடந்த வருடம் ரூ.737 கோடி வசூலாகி உள்ளது. மின் கட்டண சிலாப்புக்கான மாறுபாட்டால் பலர் அதிக கட்டணம் செலுத்த வேண்டிய நிலை உள்ளது. வீடுகளில் இருந்து பணியாற்றி வருபவர்கள் ஏ.சி.யை அதிகம் பயன்படுத்துகிறார்கள். பருவமழை தொடங்க உள்ள நிலையில் கூட பகலில் வெயில் தாக்கம் அதிகமாக இருப்பதால் மின் பயன்பாடு அதிகளவில் நீடித்து வருகிறது. இது குறித்து மின்வாரிய உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது: மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது தமிழகத்தில் தான் மின் கட்டணம் குறைவு. மாறுபட்ட கால சூழ்நிலையால் ஏ.சி. பயன்பாடு அதிகமாக இருப்பதால் கட்டணம் அதற்கேற்றவாறு மாறுபடுகிறது. இந்த ஆண்டு கோடையில் அதிகபட்சமாக 19,587 மெகா வாட் மின் பயன்பாடாக இருந்தது தற்போது ஒரு சில இடங்களில் மழை பெய்து வருவதால் மின் பயன்பாடு 16 ஆயிரம் மெகாவாட்டாக குறைந்து உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# போதிய சாலை வசதியில்லாததால் பள்ளி மாணவிகள் அவதி

சூளகிரி, செப். 7

கிருஷ்ணகிரி மாவட்டம், , சூளகிரி ஒன்றியத்திற்கு உள்பட்ட மாரண்டப்பள்ளி , கருங்கள், மைதாண்ட பள்ளி, சுழல் தின்னை மற்றும் கூட்டூர் ஆகிய கிராமங்களில் சுமார் 1500 க்கும் மேற்பட்ட குடியி ருப்பபுகள் உள்ளன.

இங்கு 3000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் விவசாய பொருட்களை விற்பனை செய்யவும், வெளியூர்களுக்கு சென்று தொழிற்சாலையில் பணிபுரிவர்கள், பள்ளி, கல்லூரிகளுக்கு செல்பவர்கள் என 1500க்கும் மேற்பட்டவர்கள் தினமும் சூளகிரி, ஒசூர், பெங்களூர், என பல பகுதிகளுக்கு சென்று வருகின்றனர். இந்நிலையில் போதிய பேருந்து வசதியில்லாததால் கிராமங்களில் உள்ள டெம்போ , ஆட்டோ, இருசக்கர வாகனங்கள் மூலம் சூளகிரி பேருந்து நிலையம் வந்து பல பகுகளுக்கு சென்று வருகின்றனர். மேலும் பள்ளி மாணவ மாணவிகள் சூளகிரியில் இருந்து மைதாண்டப்பள்ளி வரை



7 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று படித்து வருகின்றனர்.

இதனால் மாணவிகள் அச்சத்துடன் பயணம் செய்யும் நிலை ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில் மாரண்ட பள்ளி முதல் மைதாண்டப் பள்ளி வரையிலான தார்சாலை மிக மோசமான நிலையில் குண்டும், குழியுமாக உள்ளதால் அதனை சீர்படுத்தி, சூளகிரி பேருந்து நிலையத்தில் இருந்து மைதாண்டப்பள்ளி வரையிலான பகுதிக்கு பேருந்து இயக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஆரணியில் கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு சுவாமி திருவீதி உலா நிகழ்ச்சி

பெரியபாளையம், செப். 7

ஸ்ரீ ஆதிகேசவ பெருமாள் திருக்கோவிலில் கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு மாலை விசேஷ பூஜைகள் நடைபெற்றது. தூட்டார் தெருவில் உள்ள கிருஷ்ணர் கோவிலிலும் கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி, பஜார் வீதியில் ஸ்ரீராஜமன்னார் கிருஷ்ண பஜனை மந்திர தேவஸ்தான திருக்கோவில் உள்ளது. இக்கோவிலில், கிருஷ்ண ஜெயந்தி விழாவை முன்



னிட்டுகாலைமூலவருக்கு பால், தயிர், நெய் உள்ளிட்ட பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் நடைபெற்றது. இதன் பின்னர், மகாஅலங்காரம், மகாதீபாராதனைஉள்ளிட்டவை நடைபெற்றது. மதியம் கோவில் வளாகத்தில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாலை சிறப்பு பூஜை, சிறப்பு ஹோமம் உள்ளிட்டவை நடைபெற்றது. இதன் பின்னர், பூக்களாலும், மின்விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட உற்சவர் மங்கள வாத்தியம் முழங்க, வானவேடிக்கையுடன் முக்கிய வீதிகளின் வழியாக திருவீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதன் பின்னர், கோவில் வளாகத்தில் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. மேலும், ஆரணி பேருந்து நிறுத்தம் அருகே உள்ள ஸ்ரீ ஆதி லட்சுமி சமேத ஸ்ரீ ஆதிகேசவ பெருமாள் திருக்கோவிலில்கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு மாலை விசேஷ பூஜைகள் நடைபெற்றது. தூட்டார் தெருவில் உள்ள கிருஷ்ணர் கோவிலிலும் கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

# ஸ்ரீ பாண்டுரங்கருக்கு நீலமேக கண்ண வேணுகோபாலன் அலங்காரம்



வந்தவாசி, செப். 7

வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் கோவிலில் நடந்தது புல்லாங்குழலுடன் பக்தர்களுக்கு காட்சியளித்தார்

வந்தவாசி காஞ்சிபுரம் சாலையில் தென்னாங்கூர் கிராமத்தில் உள்ள ருக்குமணி சமேத ஸ்ரீ பாண்டுரங்கர் கோவில் உள்ளது.

இக்கோவிலுக்கு உள்ளூர் மற்றும் இன்றி வெளி மாநில பக்தர்களும் வருகை தந்து ஸ்ரீ பாண்டுரங்கரை வழிபடுவது வழக்கம்.

வெங்கடேச பெருமானின் அனைத்து வித அலங்காரத்தையும் ஒவ்வொரு நாளாக காட்சிப்படுத்துவார்கள்.

இந்த நிலையில் கிருஷ்ண ஜெயந்தி விழாவில் ராதையுடன் நீலமேக பட்டுடுத்தி ஸ்ரீ வேணுகோபால் அலங்காரத்தில் புல்லாங்குழலுடன் பக்தர்களுக்கு காட்சியளித்தார். இந்த விசேஷ அலங்காரத்தை ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து தரிசித்து சென்றனர்.

# மாதந்தோறும் பணிகள் ஆய்வு செய்யப்படும்

வேலூர், செப். 7

வேலூர்கலெக்டர்அலுவலகத்தில் மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் கலெக்டர் குமாரவேல் பாண்டியன் தலைமையில் இன்று நடந்தது. நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். கதிர் ஆனந்த் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் நந்தகுமார், கார்த்திகேயன், மேயர் சுஜாதா, துணை மேயர் சுனில் குமார், மாநகராட்சி கமிஷனர் ரத்தின சாமி, ஒப்பந்ததாரர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்



டனர். இதனை தொடர்ந்து அமைச்சர் துரைமுருகன் அளித்த பேட்டியில் கூறியதாவது: வேலூர் கலெக்டர் அலுவலகத்தில் இதுவரை 4 முறை ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இதுவரை வேலூர் மாநகராட்சியில் நிறைவான பணிகள் எதுவும் நடக்கவில்லை. பணிகளை விரைந்து முடிக்க மாநகராட்சி அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. இனி ஒவ்வொரு மாதமும் 6ந் தேதி மாநகராட்சியில் நடைபெறும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து ஆய்வு கூட்டம் நடத்தப்படும். அடுத்த கூட்டத்திற்குள் மாநகராட்சியில் சாலை, குடிநீர் உள்ளிட்ட பணிகள் பகுதி வாரியாக நடைபெறும். காவேரி மேலாண்மை குறித்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இன்று விசாரணை நடக்க இருந்தது. கர்நாடக அரசு அவசரமாக விசாரிக்க தேவையில்லை என கூறியதை தொடர்ந்து, வழக்கு வருகிற 27ந் தேதிக்கு ஒத்தி வைக்க ப்பட்டுள்ளது. அன்று நடக்கும் விசாரணையில் தமிழகத்தின் வாதங்களை முன்வைப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

# எல்.ஐ.சி. முகவர்கள் விழிப்புணர்வு ஊர்வலம்

பெரம்பலூர், செப். 7

பெரம்பலூர் ஆயுள் காப்பீட்டு நிறுவனம் சார்பில் இன்சூரன்ஸ் வார விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் தொடக்க நிகழ்ச்சியாக எல்.ஐ.சி. முகவர்கள் பங்கேற்ற இன்சூரன்ஸ் விழிப்புணர்வு மற்றும் தலைக்கவசம் அணிவதின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு மோட்டார் சைக்கிள் ஊர்வலம் பெரம்பலூரில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஆயுள் காப்பீட்டு கழக பெரம்பலூர் கிளை முதுநிலை மேலாளர் சங்கர் தலைமை தாங்கினார். எல்.ஐ.சி. அலுவலகம் முன்பு தொடங்கிய மோட்டார் சைக்கிள் ஊர்வலத்தை போக்குவரத்து போலீஸ் இன்ஸ்பெக்டர் மதுமதி கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதில் எல்.ஐ.சி. முகவர் சங்க தலைவர் சுத்தாங்காத்து, செயலாளர் செந்தில்குமார், பொருளாளர் கருப்பையா, கோட்ட இணை செயலாளர் முருகானந்தம் உள்பட திரளான முகவர்கள் கலந்து கொண்டனர். மோட்டார் சைக்கிள் ஊர்வலம் வெங்கடேசபுரத்தில் இருந்து புறப்பட்டு சங்குப்பேட்டை, கடைவீதி, பழைய பஸ் நிலையம், காமராஜர் வளைவு, மதனகோபாலபுரம், பாலக்கரை, புதிய பஸ் நிலையம் சென்று மீண்டும் எல்.ஐ.சி. கிளை அலுவலகத்தில் நிறைவடைந்தது

# நீலகிரி ஊட்டியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி

ஊட்டி, செப்.7

நீலகிரிஊட்டிஊட்டியில்சாலைபாதுகாப்புவிழிப்புணர்வு பேரணி நேற்று நடந்தது. இந்த பேரணியை ஊட்டி நகர போலீஸ் துணை சூப்பிரண்டு யசோதா கொடியசைத்து தொடங்கி வைத்தார். பேரணி பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் இருந்து தொடங்கி சேரிங்கிராஸ் காந்தி சிலை பகுதி வரைசென்றது. ஊட்டி அரசுகலை மற்றும் அறிவியில் கல்லூரி மாணவமாணவிகள் 200க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். அவர்கள் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது ஹெல்மெட் அணிய வேண்டும், மது அருந்தி விட்டு வாகனம் ஓட்டக்கூடாது உள்ளிட்ட சாலை விதிகள் குறித்து விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்தியவாறு சென்றனர். முன்னதாக சாலை பாதுகாப்பை வலியுறுத்தும் வகையில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதில் போலீஸ் இன்ஸ்பெக்டர் தர்மசீலன், சப்இன்ஸ்பெக்டர்கள் அருண்குமார், செந்தில்குமார் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 07.09.2023

# குடும்ப உறவுகளின் மகிமையை பேசுகிறது.. தங்கர் பச்சானுக்கு அன்புமணி வாழ்த்து




தங்கர் பச்சான் இயக்கத்தில் வெளியான படம் 'கருமேகங்கள் கலைகின்றன'. இப்படம் செப்டம்பர் 1ஆம் தேதி திரையரங்குகளில் வெளியானது. இயக்குனர் தங்கர் பச்சான் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் 'கருமேகங்கள் கலைகின்றன'. இப்படத்தில் இயக்குனர் பாரதிராஜா, யோகி பாபு, கவுதம் மேனன், எஸ்.ஏ.சந்திரசேகர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். ஜி.வி பிரகாஷ் குமார் இசையமைத்துள்ள இப்படத்திற்கு கவிஞர் வைரமுத்து பாடல் வரிகள் எழுதியுள்ளார். இப்படத்தை வாவ் மீடியா சார்பில் துரை வீரசக்தி தயாரித்துள்ளார். இப்படம் செப்டம்பர் 1ஆம் தேதி திரையரங்குகளில் வெளியானது.

இந்நிலையில், 'கருமேகங்கள் கலைகின்றன' திரைப்படத்தை பார்த்த பா.ம.க. தலைவர்அன்புமணிராமதாஸ்சமூகவலைதளத்தில்பதிவுஒன்றைபகிர்ந்துள்ளார். அதில், "இயக்குனர்தங்கர்பச்சான் படைத்திருக்கும் 'கருமேகங்கள் கலைகின்றன' திரைப்படத்தை பார்த்தேன்; ரசித்தேன். இப்போது வெளியாகும் படங்கள் கோரம், ரத்தம், கொலை, வன்முறை, ஆபாசம், இரட்டைப் பொருள் தரும் வசனங்களால் நிறைந்துள்ள நிலையில், இந்தத் திரைப்படம் குடும்ப உறவுகளின் மகிமை, பாசம், கலாச்சாரம் ஆகியவற்றை பேசுகிறது. இந்தத் திரைப்படத்தை பொதுமக்கள் அனைவரும் திரையரங்குகளுக்கு சென்று பார்க்க வேண்டும். கருமேகங்கள் கலைகின்றன படம் பார்த்த அன்புமணி ராமதஸ் இயக்குனர்கள் பாரதிராஜா, எஸ்.ஏ.சந்திரசேகரன், கவுதம்வாசுதேவ் மேனன், ஆர்.பி.உதயகுமார், நடிகர் யோகிபாபு ஆகியோர் அவர்கள் ஏற்றிருக்கும் பாத்திரங்களாகவே வாழ்ந்திருக்கின்றனர். அனைவரும் பார்க்க வேண்டிய திரைப்படம் இது!" என்று பதிவிட்டுள்ளார்.

# ஜோதிகாவையும், கங்கனாவையும் ஒப்பிடவே கூடாது ராகவா லாரன்ஸ்

'சந்திரமுகி 2' திரைப்படத்தில் நடிகை கங்கனா சந்திரமுகியாக நடித்துள்ளார். இப்படம் செப்டம்பர் 15ஆம் தேதி வெளியாகவுள்ளது. இயக்குனர் பி.வாசு இயக்கத்தில் பிரமாண்டமாக உருவாகி இருக்கும் திரைப்படம் 'சந்திரமுகி 2'. இப்படத்தில் ராகவா லாரன்ஸ் கதாநாயகனாக நடித்துள்ளார். கங்கனா ரனாவத் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் வடிவேலு, ராதிகா உள்ளிட்ட பல திரைப்பிரபலங்கள் இதில் நடித்திருக்கின்றனர்.

சந்திரமுகி 2' திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் செப்டம்பர் 15ஆம் தேதி வெளியாகவுள்ளது. இதைத்தொடர்ந்து சென்னையில் 'சந்திரமுகி 2' படத்தின் பத்திரிகையாளர்கள் சந்திப்பு நடைபெற்றது. இதில் பேசிய நடிகர் ராகவா லாரன்ஸ், "சந்திரமுகி 2 திரைப்படத்தில் நடிப்பது எனக்கு பெருமை. கங்கனா இந்த படத்தில் வந்தது மிகப்பெரிய பிளஸ். இந்த படத்தில் ஜோதிகா போன்று கங்கனா நடித்துள்ளாரா? என்று அனைவரும் என்னிடம் கேட்கிறார்கள்.

ஜோதிகாவையும், கங்கனாவையும் ஒப்பிடவே கூடாது. ஜோதிகா, தன்னை சந்திரமுகியா நினைத்துக் கொண்டார். சந்திரமுகி எப்படி இருப்பார் என்று நடித்து காண்பித்தார்.இந்தபடத்தில்தான்ஒரிஜினல்சந்திரமுகியாருனுகாண்பிக்கிறார்கள். கங்கனா 'சந்திரமுகி'கதாபாத்திரத்தை எவ்வளவு சிறப்பாக செய்ய முடியுமோ அதை செய்திருக்கிறார். இந்த படத்தில் நடித்த அனைவருக்கும் நன்றி" என்று பேசினார்.



# இத்தனை கோடிகளா? முன்பதிவில் மாஸ் காட்டும் ஜவான்



ஜவான் படத்தில் நயன்தாரா, தீபிகா படுகோனே, விஜய் சேதுபதி, யோகி பாபு, பிரியாமணி ஆகியோர் நடித்துள்ளனர். ஷாருக் கான் நடிப்பில்உருவாகிஇருக்கும்ஜவான் படத்திற்கு அனிருத் இசை யமைத்துள்ளார். ஜவான் திரைப்படத்தி ற்கான டிக்கெட் முன்பதிவுகள் அமோகமாக நடைபெற்று வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. தற்போதைய தகவல்களின்படி,ஜவான்படத்திற்கு முன்பதிவில் இருந்தே ரூ. 50 கோடிக்கும் அதிக வசூல் கிடைத்து இருப்பதாக கூறப்படுகிறது. இதுவரை நடைபெற்று இருக்கும் முன்பதிவு மற்றும் மென்பொருள் சிக்கல் என பல்வேறு காரணங்களால்முழுதொகையைகணக்கிடுவதில்சிக்கல்ஏற்பட்டுஇருப்பதாகவும் கூறப்படுகிறது. முதல் நாள் காட்சிக்கு நடைபெற்ற அதிகளவு முன்பதிவு என்ற சாதனையை ஜவான் பெற்று இருப்பதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன. நடிகர் ஷாருக்கான் நடிப்பில் உருவாகி இருக்கும் 'ஜவான்' திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி மொழிகளில் நாளை (செப்டம்பர் 7) வெளியாகிறது. இந்த படத்தில் நயன்தாரா, தீபிகா படுகோனே, விஜய் சேதுபதி, யோகி பாபு, பிரியாமணி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார்.

# வித்தியாசமான வேடங்களில் ரசிகர்கள் மனதை கொள்ளை கொள்ளும் சாக்ஷி அகர்வால்





ஆக்சன், வில்லி, கிளாமர் என அனைத்து வித்தியாசமான கதாபாத்திரங்களிலும் அசத்தி வருபவர் சாக்ஷி அகர்வால். கடந்த ஆறு மாதத்தில் அவர் நடிப்பில் மூன்று திரைப்படங்கள் வெளியாகியுள்ளன. பிக்பாஸ் மூலம் பட்டி தொட்டியெங்கும் அறிமுகமானவர் சாக்ஷி அகர்வால். தற்போது தமிழ் திரையுலகின் வளர்ந்துவரும் இளம் நடிகையாக அனைவரையும் கவர்ந்து வருகிறார். ஆக்சன், வில்லி, கிளாமர் என அனைத்து வித்தியாசமான கதாபாத்திரங்களிலும் அசத்தி வரும் சாக்ஷி, தென்னிந்திய சினிமாவின் ஹாட் ஹீரோயினாக மாறி வருகிறார். கடந்த ஆறு மாதத்தில் அவர் நடிப்பில் மூன்று திரைப்படங்கள் வெளியாகியுள்ளன. இயக்குனர் எஸ்.ஏ.சந்திரசேகரின் "நான் கடவுள் இல்லை" படத்தில் முழுநீள ஆக்ஷன் அவதாரத்தில் தோன்றிய அவர், தனது அற்புதமான நடிப்பில் ஒரு வித்தியாசமான பரிமாணத்தை காட்டினார். அதே போல் நடிகர் பிரபுதேவா கதாநாயகனாக நடித்து, சமீபத்தில் வெளியான 'பஹீரா' படத்தில் எதிர்நாயகியாக வில்லி வேடத்தில் அனைவரையும் அதிர வைத்தார். தற்போது ஹங்கமா (hungama) ஓடிடியில் வெளியாகியுள்ள "என் எதிரே ரெண்டு பாப்பா" படத்தில் ஹாட் கிளாமர் ஹீரோயினாக கலக்கியிருக்கிறார். எப்பொழுதும் ஒரே மாதிரியான கதாபாத்திரங்களை தேர்ந்தெடுக்காமல், தனித்துவமான கதாபாத்திரங்களில் மட்டுமே தொடர்ந்து தன்னை ஈடுபடுத்தி கொள்ளும் சாக்ஷி அகர்வால் தமிழ் மட்டுமல்லாமல் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளிலும் கலக்கி வருகிறார் சாக்ஷி. சமீபத்திய திரைப்படங்கள் குறித்து அவர் பேசியதாவது: "பிக்பாஸ் எனக்கு மிகப்பெரிய அடையாளம், பிக்பாஸ் எல்லோரிடமும் என்னை பற்றி அறிமுகம் தந்தது. பிக்பாஸ் அறிமுகத்தை நாம் எப்படி பயன்படுத்திக் கொள்கிறோம் என்பது நம் கையில் தான் உள்ளது. உண்மையில் என் திரைப்பட வாய்ப்புக்களை மிக கவனமாக தேர்ந்தெடுக்கிறேன். ஒரே மாதிரியான கதாபாத்திரங்கள் செய்வதில் எனக்கு விருப்பமில்லை. திரைப்படம் என்பது எனது கனவு. அதனால் தான் டான்ஸ், ஆக்சன் கற்றுக்கொள்ள தனியாக கிளாஸ் போய்க்கொண்டிருக்கிறேன். "நான் கடவுள் இல்லை" படத்தில் நான் நடித்த ஆக்சன் காட்சிகள் நன்றாக இருப்பதாக பாராட்டுகள் கிடைத்தது மிகப் பெரிய மகிழ்ச்சி." பல மொழிகளில் நடிக்கிறீர்களே, மொழிப்பிரச்சனை இருக்கிறதா? "அப்படியெல்லாம் தோன்றியதில்லை. தென்னிந்திய மொழிகளைப் பொறுத்தவரை, இங்கு வாழ்க்கை ஒன்று தான். கலைஞர்கள் எல்லோருமே தெரிந்தவர்கள் தான். மொழிப்பிரச்சனை எனக்கு பெரிதாக தெரிந்ததே இல்லை. " உங்கள் கனவு கதாபாத்திரம் என்ன? என்ன மாதிரி கதாபாத்திரங்கள் நடிக்க விருப்பம்? "என் கதாபாத்திரங்கள் ஒரே சாயலில் இருக்கக் கூடாது. ஒரே மாதிரி பாத்திரங்களில் ஒட்டிக்கொள்ள விரும்பவில்லை. வித்தியாசமான குணாதிசயங்கள் கொண்ட கதாபாத்திரங்களில் எனது திறமையை வெளிப்படுத்தவே விருப்பம். வெற்றிமாறன் இயக்கத்தில் ஒரு கிராமத்து வேடத்தில் நடிக்க வேண்டும். எனக்கென ஒரு தனி அடையாளத்தை ஏற்படுத்த வேண்டும்" என்றார்.



# சென்னையில் மூத்தோர் டென்னிஸ் போட்டி 11ந்தேதி தொடக்கம் பரிசு தொகை ரூ. 2.10 லட்சம்



பிரசிடென்சி கிளப் சார்பில் சர்வதேச மூத்தோர் (வெடன்ஸ்) ஐ.டி.எப். டென்னிஸ் போட்டி சென்னையில் வருகிற 11ந்தேதி தொடங்கு கிறது. 16ந்தேதி வரை பிரசி டென்சி கிளப் மற்றும் எஸ்.டி.ஏ.டி. டென்னிஸ் ஸ்டேடி யம் ஆகிய இடங்களில் நடக்கிறது. 35, 45 மற்றும் 55 வயதுக்கு மேற்பட்டோர் என 3 பிரிவுகளில்போட்டிநடக்கிறது.ஒற்றையர்,இரட்டையர்பிரிவில்நடைபெறுகிறது. இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் இருந்து வீரர்கள்பங்கேற்கிறார்கள்.இதுவரை90க்கும்மேற்பட்டோர்பதிவுசெய்துள்ளனர். முதல் முறையாக பெண்களும் இந்தப் போட்டியில் பங்கேற்கிறார்கள். சர்வதேச டென்னிஸ் சங்கம், அகில இந்திய டென்னிஸ் கூட்டமைப்பு மற்றும் தமிழ்நாடு டென்னிஸ் சங்கம் நடத்தும் இந்தப் போட்டியின் மொத்த பரிசு தொகை ரூ.2.10 லட்சமாகும். மேற்கண்ட தகவலை போட்டி அமைப்பு குழு தலைவர் கே.சிவராம் செல்வக்குமார் போட்டி இயக்குனர் ஹிட்டனஜோஷி, செயலாளர் செந்தில்குமார் ஆகியோர் தெரிவித்தனர்.

# ஆசிய கோப்பை வங்காளதேசத்தை 7 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது பாகிஸ்தான்

முதலில் ஆடிய வங்காளதேசம் 193 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது. பாகிஸ்தான் சார்பில் ஹரிஸ் ரவுப் 4 விக்கெட், நசீம் ஷா 3 விக்கெட் வீழ்த்தினர்.

ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரில் இன்று நடைபெற்ற சூப்பர்4 சுற்றின் முதல் போட்டியில் பாகிஸ்தான், வங்காள தேசம் மோதின. டாஸ் வென்ற வங்காளதேசம் பேட்டிங் தேர்வு செய்தது. முதலில் ஆடிய வங்காளதேசம் 38.4 ஓவரில் 193 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. முஷ்பிகுர் ரஹிம் 64 ரன்களும், கேப்டன் ஷகிப் அல் ஹசன் 53 ரன்களும் சேர்த்தனர். பாகிஸ்தான் சார்பில் ஹரிஸ் ரவுப் 4 விக்கெட்டும், நசீம் ஷா 3 விக்கெட்டும் வீழ்த்தினர். இதையடுத்து, 194 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் இமாம் ஹல் உக் பொறுப்புடன் ஆடி அரை சதமடித்து 78 ரன்னில் அவுட்டானார். முகமது ரிஸ்வான் 63 ரன்கள் எடுத்து வெற்றிக்கு வழிவகுத்தார். இறுதியில், பாகிஸ்தான் 39.3 ஓவரில் 194 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது.

# இந்திய வீராங்கனையின் உலக சாதனையை முறியடித்த சீன வீராங்கனை



ஜிஹுய் 211 கிலோ (95 கிலோ+116 கிலோ) இரண்டாவது இடத்தைப் பிடித்தார். அமெரிக்காவின் ஜோர்டன் டெலாக்ரூஸ் 200 கிலோ (88 கிலோ + 112 கிலோ) வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

டோக்கியோ ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற மீராபாய் சானுவின் க்ளீன் அண்ட் ஜெர்க் உலக சாதனையை சீன லிஃப்ட் வீராங்கனை ஜியாங் ஹுய்ஹுவா முறியடித்தார். 2021 ஆசிய சாம்பியன்ஷிப்பில், பெண்களுக்கான 49 கிலோ கிளீன் அண்ட் ஜெர்க் பிரிவில் இந்திய வீராங்கனை மீராபாய் சானு 119 கிலோ எடையை தூக்கி சாதனை படைத்தார். தற்போது இந்த சாதனையை 120 கிலோ எடையை தூக்கி சீன வீராங்கனையான ஜியாங் ஹுய்ஹுவா முறியடித்து புதிய உலக சாதனை படைத்துள்ளார். சீனாவின் மற்றொரு வீராங்கனையான ஹூ ஜிஹுய் ஸ்னாட்ச் பிரிவிலும், கிளீன் அண்ட் ஜெர்க் பிரிவிலும் (95 கிலோ +120 கிலோ) 215 கிலோ எடையை தூக்கி புதிய உலக சாதனையைப் படைத்துள்ளார். இது முந்தைய சாதனையை (213 கிலோ) விட இரண்டு கிலோகிராம் அதிகமாகும். ஹுய்ஹுவா ஸ்னாட்ச் முறையில் 95 கிலோ எடையைத் தூக்கி மார்க்கீ நிகழ்வில் முதலிடம் பெற்றார். ஜிஹுய் 211 கிலோ (95 கிலோ+116 கிலோ) இரண்டாவது இடத்தைப் பிடித்தார். அமெரிக்காவின் ஜோர்டன் டெலாக்ரூஸ் 200 கிலோ (88 கிலோ + 112 கிலோ) வெண்கலப் பதக்கத்தை வென்றார். எடை பிரிவில் முன்னணியில் இருக்கும் சானு, இந்த மாத இறுதியில் தொடங்கவிருந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கவனம் செலுத்துவதால், உலக சாம்பியன்ஷிப் போட்டியில் இருந்து சானு விலகி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானின் அனல் பறக்கும் பந்து வீச்சு 10 ஓவரில் 4 விக்கெட்டுகள் இழந்து வங்காளதேசம் திணறல்





பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் டாஸ் வென்ற வங்காளதேச அணி முதலில் பேட்டிங்கை தேர்வு செய்துள்ளது. அப்ரிடி வீசிய முதல் ஓவரை நைம் மெய்டன் செய்தார்.

6 அணிகள் கலந்து கொண்ட ஆசிய கோப்பை தொடர் பாகிஸ்தான் மற்றும் இலங்கையில் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் சூப்பர் 4 சுற்று போட்டிகளின் முதல் ஆட்டத்தில் பாகிஸ்தான் வங்காளதேசம் அணி மோதுகிறது. இதில் டாஸ் வென்ற வங்காளதேச அணி கேப்டன் ஷகிப் அல் ஹசன் முதலில் பேட்டிங்கை தேர்வு செய்துள்ளார். அதன்படி வங்காளதேசம் முதலில் பேட்டிங் செய்து வருகிறது. தொடக்க ஆட்டக்காரர்களாக நைம் ஹசன் மிர்ஷா களமிறங்கினர். அப்ரிடி வீசிய முதல் ஓவரை நைம் மெய்டன் செய்தார். அடுத்த ஓவரை நசீம் ஷா வீசினார். இவர் வீசிய முதல் பந்தில் ஹசன் மிர்ஷா டக் அவுட் ஆகி வெளியேறினார். இதனையடுத்து நைம் மற்றும் தாஸ் ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. 4 ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 26 ரன்கள் எடுத்திருந்தது. 5வது ஓவரை அப்ரிடி வீசினார். இந்த ஓவரின் 5வது பந்தில் லிட்டன் தாஸ் கீப்பரிடம் கேட்ச் கொடுத்து வெளியேறினார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த நைம் 7வது ஓவரில் ஹரிஸ் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். 10வது ஓவரின் முதல் பந்தில் தௌஹித் ஹிரிடோய் 2 ரன்னில் ஆட்டமிழந்தார். இதனால் வங்காளதேசம் அணி 10 ஓவர் முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 49 ரன்கள் எடுத்துள்ளது. பாகிஸ்தான் தரப்பில் ஹாரிஸ் ரவுப் 2 விக்கெட்டுகளையும், அப்ரிடி, நசீம் ஷா தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தியுள்ளனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.